# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 57/ந/2024
நாள் 09.01.2025

திரு. ச. இராசேசுகண்ணா,
கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி, தூத்துக்குடி – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, சண்முகசிகாமணி நகர், கதவு எண்.5/337 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இராசேசுகண்ணா என்பவரின் 01.05.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2024 அன்று பெறப்பட்டு, 57/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, சண்முகசிகாமணி நகர், கதவு எண்.5/337 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இராசேசுகண்ணா என்பவர் தனது 01.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"கோவில்பட்டி நகரில் முக்கிய சாலைகளில் ஒன்றான புதுரோடு சாலையில் தினமும் பல ஆயிரம் மக்கள் ரயில் நிலையம் மற்றும் தூத்துக்குடி துறைமுகம் செல்லும் வாகனங்கள் மற்றும் பல அரசு அலுவலகங்கள் பல அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு மாணவ மாணவிகள் சைக்கிளில் செல்லும் பகுதி ஆகும். மேலும் அந்த சாலையில் தான் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையும் உள்ளன. மருத்துவமனை அவசர வாகனங்களிலும் சென்று வரும் பகுதி ஆகும்.

கோவில்பட்டி நகரில் அதிகமான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ள புதுரோடு சாலையில் உள்ள எஸ்தர் ராணி திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில், மேற்படி திருமண மண்டபத்தில் முறையாக வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாத நிலையில் சாலையில் வாகனங்களை நிறுத்தம் செய்வதால் அந்த சாலையை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டு செல்லும் நிலை உள்ளது.

குறிப்பாக, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக சாலையில் தடுப்பு சுவர் (Divider) வைக்கப்பட்டது. ஆகையால், இந்த திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் மிகுந்த சிரமப்பட்டு செல்லும் நிலை உள்ளது.

தற்போது மேற்படி திருமண மண்டபம் வணிக வளாகம் என்ற பெயரில் அனுமதி பெற்று திருமண மண்டபமாக இயங்கி வந்துள்ளது தெரிய வருகிறது. மேற்படி திருமண மண்டபம் மட்டும் அல்ல அதனுடன் எட்டையபுரம் சாலையில் உள்ள N.K. திருமண மஹாலும் வணிக வளாகம் என்ற பெயரில் அனுமதி பெற்று திருமண மண்டபமாக இயங்கி வருவது தெரியவந்துள்ள நிலையில் இவை அனைத்தும் தன்னிடம் உள்ள ஆவணங்கள் அடிப்படையில் தெரிந்தும் கோவில்பட்டி நகராட்சி ஆணையர் திருமதி. கமலா அவர்கள் மற்றும் கட்டுமானம் பிரிவைச் சேர்ந்த அலுவலர்களும் வணிக வளாகத்தை விதிமுறைகளுக்கு புறம்பாக திருமண மண்டபமாக இயங்கி வர அனுமதித்து தங்களிடம் உள்ள ஆவணங்களை மறைக்கும் வகையில் அதை திருமண மண்டபம் என்று கூறியுளார்கள். ஆகையால் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும், சட்ட விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டு வரும் மேற்படி அனுமதியற்ற திருமண மண்டபங்கள் தொடர்ந்து இயங்குவதை தடை செய்ய தங்களிடம் கோரிக்கை வைக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 29.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.**

**3) கோவில்பட்டி நகராட்சி ஆணையர் தனது 14.08.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-**

"கோவில்பட்டி நகர்மன்ற வார்டு எண்.12, புது ரோடு பகுதியில் 10 வருடங்களாக கதவு எண்.64, 64A, 64B & 64C-ல் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வரும் எஸ்தர் ராணி மஹாலில் போதிய வாகனம் நிறுத்துமிடம், தீ பாதுகாப்பு உபகரணங்கள் / வசதிகள் மற்றும் அவசர கால வெளியேறும் வழிகள் போன்ற அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருவதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு.பி.எஸ்.சுதாகரன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட Call your Collector, தூத்துக்குடி மனு நாள் 01.04.2023–ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதிகளின்படி { 35 (4) 39(5) & 64(1) (2) (3) } மேற்காணும் வசதிகளை ஏற்படுத்தி கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு அதன் விபரத்தினை தெரிவிக்குமாறு, கோவில்பட்டி நகராட்சி அலுவலக கடித ந.க.எண். 888/2023/எப்1, நாள் 29.05.2023 ன்படி அக்கட்டிடத்தின் உரிமையாளர் திரு. செந்தில்குமார் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து திரு. ச. இராசேசுகண்ணா, சண்முகசிகாமணி நகர், கோவில்பட்டி என்பவரின் மனு TN/MAWS/TUT/P/ PORTAL/26JUN23/5761717 நாள் 26.06.2023-ன் பேரில் மேற்கண்ட எஸ்தர் ராணிமஹால் பொது கட்டிடத்தில் போதிய வாகனம் நிறுத்துமிட வசதி, தீ பாதுகாப்பு உபகரணங்கள் / வசதிகள் மற்றும் அவசரகால வெளியேறும் வசதிகள் ஏற்படுத்தி அதன் விவரத்தினை கீழ்க்காணும் சான்றிழ்களுடன் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கோவில்பட்டி நகராட்சி அலுவலக கடித ந.க.எண். 888/2023/எப்1, நாள் 26.10.2023–ன்படி தமிழ்நாடு நகர் ஊராமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 & 57 ஆகியவைகளின் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

1 மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள் தூத்துக்குடி அவர்களிடமிருந்து பெறப்பட்ட தடையின்றுமைச் சான்று நகல்

2 வருவாய் வட்டாட்சியர், வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கைத்துறை, கோவில்பட்டி அவர்களிடமிருந்து பெறப்பட்ட தமிழ்நாடு பொதுக்கட்டிடங்கள் உரிமம் நகல்

3 கோவில்பட்டி நகராட்சியால் வழங்கப்பட்ட சுகாதாரச் சான்றிதழ்

4 வாகனம் நிறுத்துமிடம் காட்டும் உத்தேச வரைபடம்

மேலும் The Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules, 2022 விதி 3-ன்படி மேற்கூறிய கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபட நகலினையும் இணைத்து கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும், தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவுகள் 56 & 57-களின் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க உரிய சான்றாவணங்களுடன் போதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டமைக்கான விபரங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்காத காரணத்தினால் மேற்கண்ட அனைத்து ஆவணங்களின் நகல்களையும் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு The Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules, 2022 விதி 3-ன்படி வரையறுக்கப்பட்ட படிவம் 1-,ல் கோவில்பட்டி நகராட்சி அலுவலக ந.க.எண். 888/2023/எப்1, நாள் 18.01.2024ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை பெற்றுக் கொண்ட எஸ்தர் ராணிமஹால் உரிமையாளர் தனது கடிதத்தில் மேற்கண்ட திருமணமஹால் பயன்பாட்டிலிருந்து வணிக பயன்பாடு கட்டிடமாக மாற்றி உள்ளேன் எனவும், மேற்கண்ட கட்டிடத்திற்கு அரையாண்டு சொத்து வரியாக ரூ.81744/- செலுத்தி வருவதாகவும் தெரிவித்து, மேற்கண்ட கட்டிடத்திற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தின் நகலினையும், சொத்துவரி இரசீதுகளையும் மற்றும் மனையின் உரிமைக்கான ஆவணங்களையும் இணைத்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட கட்டிட உரிமையாளரின் கடிதத்தின்படி மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில் தரைத்தளம் உணவு அருந்தும் கூடம் (Dining Hall) தற்போது Herbal Clinic பயன்பாட்டிலும் மற்றும் முதல் தளத்தில் இயங்கி வந்த Marriage Hall மாற்றப்பட்டு PMKVY (Pradhan Mantri Kavshal Vikas Yojana) திட்டத்தின் கீழ் National Skill Development Corporation (NSDC) மூலம் தையல் பயிற்சி வழங்கும் திட்ட பயன்பாடு கட்டிடப் பகுதியாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டிடத்திற்கு சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பொருள் வைப்பறை பயன்பாட்டிற்கு கட்டிட அனுமதி 2014-ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பயன்பாட்டு கட்டிடமாக மாற்றப்பட்டு இருப்பதால் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு புது ரோட்டில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி தற்போது ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் ஏதுமில்லை என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் முறையீட்டு மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் சுமார் 10 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு 04.02.2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள், 2019-ன்படி வரையறுக்கப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்துமிடம் வசதிகள் ஏற்படுத்துமாறு அறிவிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்வதில் ஏற்படும் சட்டம் சார்ந்த பிரச்சனைகளை கருத்தில் கொண்டு, ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டு தொடர்ந்து பயன்பாட்டிலிருந்து வரும் கட்டிடங்களுக்கு The Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules, 2022-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம் எஸ்தர் ராணிமஹால் உரிமையாளரால் திருமண மண்டபம் கட்டிட பயன்பாட்டினை மாற்றி Herbal Clinic மற்றும் National Skill Development Corporation (NSDC) மூலம் தையல் பயிற்சி வழங்கும் திட்ட பயன்பாடு கட்டிடப் பகுதியாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருவதால் மனுவில் தெரிவித்துள்ளவாறு தற்போது புது ரோடு பகுதியில் வாகனங்கள் போக்குவரத்திற்கு நெருக்கடிகள் எற்படுவதற்கு முற்றிலும் வாய்ப்புகள்

ஏதுமில்லை என்பதை கருத்தில் கொண்டு மனுதாரரின் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து முடித்து வைக்குமாறு நகராட்சி ஆணையாளர் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவில்பட்டி நகர்மன்றம், வார்டு எண்.26, எட்டையாபுரம் ரோடு கதவு எண்.58,58-1 & 58-2-ல் அமைந்துள்ள N.K.மஹாலில் போதுமான அளவில் வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி இல்லாத காரணத்தினால் எட்டையாபுரம் ரோடு பகுதியில் பொது மக்களின் அன்றாட போக்குவரத்திற்கும் மற்றும் வாகனங்களின் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதாக பெறப்பட்ட திரு.பி.எஸ்.சுதாகரன், என்பவரின் Call your Collector தூத்துக்குடி மனு நாள் 28.02.2022-ன்படி மேற்கண்ட திருமண மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் பொது மக்களின் வாகனங்கள் அனைத்தையும் வேறு தகுதியான மாற்று இடத்தில் நிறுத்த உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவரத்தினை தெரிவிக்குமாறு கேட்டு கோவில்பட்டி நகராட்சி அலுவலக ந.க.எண். 888/2023/எப்1, நாள் 08.03.2023 ன் படி N.K.மஹால் உரிமையாளர் திரு. நாகேஷ்வரன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட N.K.மஹால் கோவில்பட்டி நகராட்சி அலுவலக அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 35(4) 39(5) 53 & 64 (1) (2) (3)-களின் படி வாகனம் நிறுத்துமிடம், தீ பாதுகாப்பு உபகரணங்கள் / வசதிகள் மற்றும் அவசர கால வெளியேறும் வழிகள் ஏற்படுத்தி, அதன் விவரத்தினை உரிய சான்றிதழ்களுடன் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு எழுத்துப்பூர்வமாய் தெரிவிக்குமாறு கோவில்பட்டி நகராட்சி அலுவலக ந.க.எண். 888/2023/எப்1, நாள் 29.05.2023 ன் கீழ் திரு.எம்.நாகேஷ்வரன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை பெற்றுக் கொண்ட N.K.மஹால் உரிமையாளர் 07.06.2023 நாளிட்ட தனது கடிதத்தில், N.K.மஹாலுக்கு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்கு வேறு இடத்தினை தேர்வு செய்துள்ளோம் எனவும், தீ பாதுகாப்பு உபகரணங்கள் வசதிகள் பொறுத்து மாவட்ட அலுவலர் தீயணைப்பு மீட்பு பணிகள், தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் ஓ.மு. எண். 10651/அ/2022, நாள் 04.11.2022ன் படி தடையின்மைச் சான்று பெறப்பட்டிருப்பதாகவும், N.K.மஹால் இருபுறங்களிலும் அவசர கால வழிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படாத நிலையில் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, N.K. மஹால் உரிமையாளரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வாகனங்கள் நிறுத்துவதற்கு தகுதியான மாற்று இடம் தேர்வு செய்து அதன் விவரத்தினை முழுவடிவில் உரிய ஆவணங்களுடன் தெரிவிக்காத காரணத்தினால், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 & 57 விதிகளின் கீழ் (The Tamil Nadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules, 2022 விதி 3ன் படி மேற்கண்ட கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தினை கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டு கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை பெற்றுக் கொண்ட N.K.மஹால் உரிமையாளர் தனது 20.11.2023ஆம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட கட்டிடம் அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படியும், மேற்கண்ட கட்டிடத்திற்கு சொத்து வரி, குடிநீர்க் கட்டணம் முறையாக செலுத்தியிருக்கிறோம் எனவும் மேற்கண்ட அறிவிப்பில் கண்டுள்ளவாறு உரிய கட்டமைப்புகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு உரிய கட்டமைப்புகளை போதிய கால அளவிற்குள் ஏற்படுத்தாத காரணத்தினால் The Tamil Nadu Town and Country Planning ( Removal of unauthorized Development) Rules, 2022 விதி 3–ன்படி வரையறுக்கப்பட்ட படிவம்–1ல் கீழ்க்காணும் ஆவணங்களை கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கடித ந.க. எண். 888/2023/ எப்1 நாள்.18.01.2024ன் கீழ் அறிவிப்பு மீண்டும் சார்பு செய்யப்பட்டது.

1 கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபடம் நகல்

2 மேற்கண்ட கட்டிடம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தொழில் நுட்ப அனுமதி நகல், திட்ட அனுமதி உத்திரவு நகல் மற்றும் கட்டிட அனுமதி உத்திரவு நகல்

3 மனை கட்டிடத்தின் உரிமைக்கான ஆவணங்கள்

மேற்கண்ட ஆவணங்கள் கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்தில் குறிப்பிட்ட கால அளவிற்குள் தாக்கல் செய்யாத காரணத்தினால் மேற்கண்ட ஆவணங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 & 57 களின் கீழ் உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.888/2023/எப்1 நாள்.29.04.2024ன்படி The Tamil Nadu Town and Country Planning (Removal of Unauthorized Development) Rules 2022 விதி எண்.3ன்படி வரையறுக்கப்பட்ட படிவம்–1ல் மீண்டும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவிப்பினை தொடர்ந்து மேற்படி The Tamil Nadu Town and Country Planning ( Removal of Unauthorized Development) Rules 2022ன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மனுதாரரும் மற்றும் பலரும் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பின் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு தொடர்ந்து இயங்கி வரும் அனைத்து பொது கட்டிடங்கள் குறிப்பாக மருத்துவமனைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து பல்வேறு புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டு வருவதால் அதனடிப்படையில் சம்மந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 35(4), 36F, 37F, 39(5)– இணைப்பு–IV-ல் வரையறுக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் வசதிகள் இதற்கு முன் நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் 1972–ல் வரையறுக்கப்படவில்லை. எனவே தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டிட அனுமதி வரைபடங்களில் உத்தேச வாகனம் நிறுத்துமிடம் வசதிகள் தெளிவாக காண்பிக்கப்படுகிறது. மேற்கண்ட நடைமுறை 04.02.2019 க்கு முன்னர் இந்நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடங்களில் உத்தேச வாகனம் நிறுத்துமிடம் எண்ணிக்கைகளின் அடிப்படையில் காண்பிக்கப்படுவதில்லை. எனவே மேற்கண்டவாறு தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழ்நாடு ஒருங்கிணைநத அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி வாகனம் நிறுத்துமிடம் வசதிகள் ஏற்படுத்துமாறு பல வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு தொடர்ந்து இயங்கி வரும் பொது கட்டிடங்களுக்கு அறிவிப்புகள் வழங்கும் நிகழ்வின் மூலம் இந்நகரில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழும் சூழ்நிலையில் உள்ளது.

எனவே பல வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு தொடர்ந்து இயங்கி வரும் பொது கட்டிடங்களின் மீது மேற்கண்ட சட்டம் சார்ந்த பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உரிய சட்டப்பூர்வமான முறைகளில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு இருப்பதால் மேற்காணும் முறையீட்டு மனுபினை தள்ளுபடி செய்து உத்திரவு வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஆகியோரை 17.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 02.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பின்னர் விசாரணை 30.09.2024க்கு மாற்றப்பட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 10.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5) மனுதாரர் திரு.ச.இராசேசுகண்ணா 30.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கோவில்பட்டி நகரில் முக்கிய சாலைகளில் ஒன்றான புதுரோடு சாலையில் தினமும் பல ஆயிரம் மக்கள் ரயில் நிலையம் மற்றும் தூத்துக்குடி துறைமுகம் செல்லும் வாகனங்கள், பல அரசு அலுவலகங்கள், பல அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு செல்லும் மாணவ மாணவிகள் சைக்கிளில் செல்லும் பகுதி ஆகும். மருத்துவமனைக்கு செல்லும் அவசர ஆம்புலன்ஸ் போன்ற வாகனங்களும் தினமும் சென்று வரும் பகுதியாகும். அதிகமான போக்குவரத்து உள்ள புதுரோடு சாலையில் உள்ள எஸ்தர் ராணி திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் மேற்படி திருமண மண்டபத்தில் முறையாக வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாத நிலையில் திருமண மண்டபத்திற்கு வரும் மக்கள் சாலையில் தங்களது இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தம் செய்வதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. குறிப்பாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக சாலையில் தடுப்பு சுவர் (Divider) வைக்கப்பட்டது. ஆகையால் இந்த திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் மிகுந்த சிரமப்பட்டு செல்லும் நிலை உள்ளது.

தற்போது மேற்படி திருமண மண்டபம் வணிகவளாகம் என்ற பெயரில் அனுமதி பெற்று திருமண மண்டபம் ஆக இயங்கி வந்துள்ளது தெரிய வருகிறது. மேலும் எட்டையபுரம் சாலையில் உள்ள N.K. திருமண மஹாலும் வணிக வளாகம் என்ற பெயரில் அனுமதி பெற்று இயங்கி வருவது தெரிய வருகிறது. எனவே விதிமுறைகளுக்கு புறம்பாக திருமண மண்டபமாக நகராட்சி அலுவலர்களின் அனுமதியுடன் இயங்கி வருகிறது.

"The Multi-Storyed and Public Buildings Rules 1973 (Rule 13) The Tamil Nadu District Municipalities Building Rules 1972 (Rule 12) கட்டிட வளர்ச்சி கட்டுப்பாடு விதிமுறைகள் ஆகியவைகளில் கண்டுள்ளவாறு வாகன நிறுத்துமிட தேவைகளின்படி வாகன நிறுத்துமிடங்கள் மனையிடத்திலேயே அதன் உரிமையாளரால் அமைக்கப்பட வேண்டும். N.K.மஹாலில் அப்படி ஒரு வாகன நிறுத்துமிடம் இல்லை. ஆதலால் திருமண மண்டபம் செயல்பட தகுதியில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 (TNCDBR) தமிழ்நாடு அரசிதழின்படி, கல்யாண மண்டபம் சட்டசபை அரங்குகள் கண்காட்சி அரங்குகள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், ஹோட்டல்கள், தங்கும் இல்லங்கள், சினிமா தியேட்டர்கள், மல்டி பிளக்ஸ் அல்லது மால்கள் போன்ற பொது கட்டிடங்களுக்கு 6 மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் N.K. திருமண மஹால் எந்தவொரு அரசின் விதியையும் பின்பற்றாமல் இயங்கி வருகிறது. ஆகவே திருமண மண்டபம் செயல்பட துளியும் தகுதியற்றது.

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புகள், தற்காலிக ஆக்கிரமிப்புகள் புதுரோடு, மெயின்ரோடு, எட்டையபுரம் ரோடு, AKS தியேட்டர் ரோடு, மார்க்கெட் ரோடு, கிருஷ்ணன் கோவில் தெரு மற்றும் சத்திரம், கீழரதவீதி, மந்தி தோப்பு ரோடு ஆகிய இடங்களில் உள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றி முறைப்படுத்த வேண்டும்.

கோவில்பட்டி டவுன் (பிளாக் D) வார்டு எண்.19-ல் உள்ள பழைய சர்வே எண்.278/2 PT/4PT புதிய சர்வே எண்.3/1 கொண்ட நிலம் சர்கார் புறம்போக்கு என்று வருவாய் கணக்கில் உள்ள பல கோடி ரூபாய் பெருமானமுள்ள அரசு நிலத்திற்கு முறைகேடாக கோவில்பட்டி நகராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வரிவிதிப்பு ரசீதை ரத்து செய்திட வேண்டுமெனவும் முறைகேடாக வரிவிதிப்பு ரசீது வழங்கிய கோவில்பட்டி நகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுத்திடவும் இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 30.09.2024 நாளிட்ட வாக்குமூல அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக கோவில்பட்டி நகராட்சி மூலமாக 29.05.2023 அன்று தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 5 (4)-ன்படி வாகன நிறுத்துமிடம் அமைத்து அறிக்கை செய்யுமாறு அறிவிப்பு வழங்கப்பட்டது.

- மனுதாரர் புகார் தெரிவித்துள்ள எஸ்தர் ராணிமஹால் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவ 56 & 57–ன் கீழ் அறிவிப்பும், Tamilnadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules 2022 விதி எண்.3ன்படி மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட அனுமதி வரைபட நகராட்சிக்கு சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டது.

- எஸ்தர் ராணிமஹால் உரிமையாளர் மேற்படி எஸ்தர் ராணி திருமணமஹால் பயன்பாட்டிலிருந்து வணிக பயன்பாடு கட்டிடமாக மாற்றி கட்டிடத்திற்கு அரையாண்டு சொத்து வரியாக ரூ.81744/- செலுத்தி வருவதாகவும் தெரிவித்து மேற்படி கட்டிடத்திற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபட நகல், சொத்துவரி இரசீதுகளின் நகல் மற்றும் மனையின் உரிமைக்கான ஆவணங்களை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

- மேற்கண்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் தரைதளம் உணவு அருந்தும் கூடம் (Dining Hall) தற்போது Herbal Clinic பயன்பாட்டிலும் மற்றும் முதல் தளத்தில் இயங்கி வந்த Marriage Hall மாற்றப்பட்டு PMKVY (Pradhan Mantri Kavshal Vikas Yojana) திட்டத்தின் கீழ் National Skill Development Corporation (NSDC) மூலம் தையல் பயிற்சி வழங்கும் திட்ட பயன்பாடு கட்டிடப் பகுதியாக மாற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டிடத்திற்கு சில்லரை விற்பனை கடைகள் மற்றும் பொருள் வைப்பறை பயன்பாட்டிற்கு கட்டிட அனுமதி 2014ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

- மேற்கண்ட கட்டிட பயன்பாடு மாற்றப்பட்டு இருப்பதால் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளவாறு புதுரோட்டில் வாகன போக்குவரத்து நெருக்கடி தற்போது ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் ஏதுமில்லை என தெரிவித்துக்கொள்கிறோம்.

- கோவில்பட்டி நகர்மன்றம், வார்டு எண்.26, எட்டையபுரம் ரோடு, கதவு எண்.58,58-1 & 58-2-இல் அமைந்துள்ள N.K.மஹாலில் போதுமான அளவில் வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி இல்லாத காரணத்தினால் வேறு தகுதியான மாற்று இடம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை தெரிவிக்குமாறு N.K.மஹால் உரிமையாளர் திரு.நாகேஷ்வரன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 35 (4)-ன் கீழ் 29.05.2023ம் தேதியிட்டு மீண்டும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- மேற்கண்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்ட NK மஹால் உரிமையாளர் போதிய வாகனங்கள் நிறுத்துமிடம் வசதிகள் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என தனது 07.06.2023ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

- மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு போதிய வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி அமைக்கப்பெறாத காரணத்தினால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 & 57–ன் கீழ் 26.10.2023 அன்று NK மஹால் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்ட நிலையில், NK மஹால் உரிமையாளர் தனது 20.11.2023ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

- மேற்கண்ட பதில் அறிக்கையின்படி குறிப்பிட்ட கால அளவிற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத காரணங்களினால் The TamilNadu Town and Country Planning (Removl of unauthorized Development) Rules 2022 விதி 3–ன்படி 18.01.2024 மற்றும் 29.04.2024 தேதியிட்டு NK மஹால் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

- மேற்கண்ட அறிவிப்புகளை தொடர்ந்து, NK மஹால் அருகில் சுமார் 246.00மீ தூரத்தில் அமைந்துள்ள வக்கீல் தெரு சர்வே வார்டு E, பிளாக் 7, நகரளவை எண்.7pt–ல் 2712.00 சதுர அடி பரப்பளவில் வாகனங்களை நிறுத்துமிடமாக பயன்டுத்துவதற்கு , அம்மனையின் உரிமையாளர் K.ஜெயக்குமார் த/பெ. குமாரசாமி, என்பவரிடமிருந்து வாடகை ஒப்பந்த அடிப்படையில் அனுமதி பெற்று, தற்போது NK மஹால் அமைந்துள்ள எட்டையபுரம் ரோட்டில் மனுதாரரரின் கோரிக்கையின்படி போக்குவரத்து நெருக்கடி ஏற்படாதவகையில் தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளோம் என NK மஹால் உரிமையாளர் தனது 23.09.2024ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

- கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட புதுரோடு, சாத்தூர் மெயின் ரோடு, பசுவந்தனை ரோடு, கடலையூர் ரோடு, மாதாங்கோவில் ரோடு, எட்டையபுரம் ரோடு அகிய நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ள சாலைகளில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக ஆக்கிரமிப்புகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் நகராட்சியின் கூட்டு நடவடிக்கைகள் மூலம் 03.07.2024, 04.07.2024 மற்றும் 05.07.2024 ஆகிய தேதிகளில் அகற்றப்பட்டது.

- கோவில்பட்டி நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ள மந்திதோப்பு ரோடு, மற்றும் கதிரேசன் கோவில் ரோடு ஆகிய சாலைகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிக ஆக்கிரமிப்புகள் 18.07.2024 மற்றும் 02.08.2024 அன்று இந்நகராட்சியின் நடவடிக்கைகள் மூலம் அகற்றப்பட்டது.

- மேற்கண்ட நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் அமைந்துள்ள நெடுஞ்சாலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிரந்தர ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு தூத்துக்குடி மக்கள் நீதிமன்றத்தில் ஏற்கனவே திரு.இராசேசுகண்ணா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி 60 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மேலும் சாலையோரங்களில் வியாபாரம் செய்யும் தெருவோர வியாபாரிகளை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல், வியாபாரத்தினை முறைப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன் கீழ் கோவில்பட்டி நகர விற்பனைக்குழு (Town Vending Committee) அமைக்கப்பட்டு, மேற்கண்ட விதிகளின் கீழ் தொடர் நடவடிக்கை 60 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும்.

- கோவில்பட்டி எட்டையபுரம் ரோடு சர்வே வார்டு Dபிளாக் 19 நகரளவை எண்.3/7–ல் அமைந்துள்ள சர்க்கார் புறம்போக்கு – மெடிக்கல் டிஸ்பென்சரி கிராமநத்தம் என நிலவகைப்பாடு செய்யப்பட்டுள்ள 417.00 ச.மீ. இடத்தில் முன்னாள் இராணுவ வீரர் மூலம் கட்டப்பட்டுள்ள 10' x 10' அளவுகள் கொண்ட கட்டிடத்திற்கு வணிக பயன்பாட்டில் மேற்கூரை (Super structure) சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வரிவிதிப்பினை பிரச்சினைகளின் அடிப்படையிலும் எந்நேரத்திலும் நீக்கம் செய்வதற்கு எந்தவிதமான ஆட்சேபனைகளும் தெரிவிக்க மாட்டோம் என்று உறுதிமொழி கொடுத்ததன் அடிப்படையில் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலைத்துறை மற்றும் நகராட்சியின் கூட்டு நடவடிக்கையின் மூலம் ஒரு மாத காலத்திற்குள் தற்காலிக ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் 14.08.2024 நாளிட்ட அறிக்கையில் சமர்ப்பித்துள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

(i) கோவில்பட்டி நகரில் அதிகமான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ள புதுரோடு சாலையில் உள்ள எஸ்தர் ராணி திருமண மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில், முறையான வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாத நிலையில் சாலைகளில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுவதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஸ்தர் ராணி திருமண மஹால் கட்டடம் நேராய்வு செய்யப்பட்டதில் தரைத்தளம் உணவு அருந்தும் கூடம் (Dining Hall) தற்போது Herbal Clinic பயன்பாட்டிலும் மற்றும் முதல் தளத்தில் இயங்கி வந்த Marriage Hall மாற்றப்பட்டு PMKVY (Pradhan Mantri Kavshal Vikas Yojana) திட்டத்தின் கீழ் National Skill Development Corporation (NSDC) மூலம் தையல் பயிற்சி வழங்கும் திட்ட பயன்பாடு கட்டிடப் பகுதியாக மாற்றப்பட்டு வணிக பயன்பாடு கட்டிடமாக மாற்றப்பட்டு உள்ளதாகவும், அரையாண்டு சொத்து வரியாக ரூ.81744/- செலுத்தி வருவதாகவும், கட்டடத்திற்கு பெறப்பட்ட கட்டட அனுமதி வரைபடத்தின் நகலினையும், சொத்துவரி இரசீதுகளையும் மற்றும் மனையின் உரிமைக்கான ஆவணங்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்து, எஸ்தர் ராணி திருமண மஹால் பயன்பாட்டு கட்டிடமாக மாற்றப்பட்டு இருப்பதால் வாகனப் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் ஏதுமில்லை என நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், 2019–க்கு முன் பயன்பாட்டில் இருந்த **Rule 13 of the Multi Storeyed and Public Buildings Rules, 1973, Rule 12 of the Tamil Nadu District Municipalities Building Rules, 1972** மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள பிரிவு 35 (4) பார்க்கிங் இணைப்பு – **IV of the Tamil Nadu Combined Development and Building Rules, 2019** ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு வாகன வசதியினை கட்டட வளாகத்தில் அமைக்கப்பட வேண்டிய நிலையில், பயன்பாட்டு மாற்றம் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என்ற நகராட்சி ஆணையரின் கூற்று ஏற்புடையதன்று. எனவே, எஸ்தர் ராணி திருமண மஹாலில் உரிய பார்க்கிங் வசதிகள் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து,

உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ii) கோவில்பட்டி நகர்மன்றம், வார்டு எண்.26, எட்டையபுரம் ரோடு, கதவு எண்.58,58-1 & 58-2-இல் அமைந்துள்ள N.K.மஹாலில் போதுமான அளவில் வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி இல்லாத காரணத்தினால், வேறு தகுதியான மாற்று இடம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை தெரிவிக்குமாறு N.K.மஹால் உரிமையாளர் திரு. நாகேஷ்வரன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனை பெற்றுக்கொண்ட NK மஹால் உரிமையாளர் போதிய வாகனங்கள் நிறுத்துமிடம் வசதிகள் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என தனது 07.06.2023ம் தேதிய கடிதத்தில் தெரிவித்தும், போதிய வாகனங்கள் நிறுத்துமிடம் வசதி அமைக்கப்பெறாத காரணத்தினால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 & 57–ன் கீழ் 26.10.2023 அன்று NK மஹால் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்ட நிலையில் குறிப்பிட்ட கால அளவிற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத காரணங்களினால் The TamilNadu Town and Country Planning (Removal of unauthorized Development) Rules 2022 விதி 3–ன்படி 18.01.2024 மற்றும் 29.04.2024 தேதியிட்டு NK மஹால் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது NK மஹால் அமைந்துள்ள எட்டையபுரம் ரோட்டில் மனுதாரரின் கோரிக்கையின்படி போக்குவரத்து நெருக்கடி ஏற்படாதவகையில் தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளோம் என NK மஹால் உரிமையாளர் தனது 23.09.2024 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இந்நேர்வில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைகள், அரசாணை G.O.(Ms.) No.07, Housing and Urban Development [UD4 (1)] Department, dated 10.01.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் பிரிவு 35 (4) of the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 ஆகியவற்றை கருத்தில் கொண்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2025ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 9–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ச. இராசேசுகண்ணா,
கதவு எண்.5/337, சண்முகசிகாமணி நகர்,
கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)